Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror

THURSDAY, FEBRUARY 29, 2024

வியாழக்கிழமை பெப்ரவரி 29, 2024 | ஒளி: 09 கதிர் 202 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE



“ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவளிக்காமல் இருக்க

# மொட்டுக் கட்சிக்கு உரிமையில்லை”

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்காமல் இருக்க பொஹொட்டுவவுக்கு உரிமை இல்லை என தனிப்பட்ட முறையில் தாம் நம்புவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொஹொட்டுவவிற்கு மாற்று வேட்பாளர் இல்லையென்றால் ரணில் விக்ரமசிங்கவை ஆதரிப்பதே சிறந்தது எனவும் பொஹொட்டுவவிற்கு வேறு மாற்று வேட்பாளர் இருப்பதாக தாம் அறியவில்லை எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

## நெருக்கடியில் பேக்கரி தொழில்



நாட்டின் அதிக உற்பத்திச் செலவுகள் காரணமாக உள்ளூர் சந்தையில் கேக், பாண் மற்றும் பனிஸ் வகைகளில் விற்பனை சுமார் 50 சதவீதத்தால் குறைந்துள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் (ACBOA) தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

இலங்கை வருவதற்கான கனவு கலைந்தது

## விடுதலையான சாந்தன் மரணம்



**மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சாந்தன், மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்**

**உடலை இலங்கைக்கு கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சட்டத்தரணி தெரிவித்துள்ளார்**



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான யாழ். உடுப்பிட்டியைச் சேர்ந்த சாந்தன், சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் தீவிர மருத்துவக் கண்காணிப்பில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், திங்கட்கிழமை (28) காலை காலமானார்.

கல்லீரல் செயலிழப்பால் பாதிக்கப்பட்ட அவர், கடந்த ஜனவரி மாதம் முதல் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், மாரடைப்பு காரணமாக உயிரிழந்தாக மருத்துவமனை நிர்வாகம் உறுதி செய்துள்ளது.

அத்துடன், சாந்தனின் உடலை இலங்கைக்கு கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சாந்தன் தரப்பு சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “பெண் தொழில் முனைவோரை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது”



நாட்டில் ஏற்படுத்தப்படவிருக்கும் பொருளாதார மாற்றத்திற்கு ஏற்றவாறு பெண் தொழில் முனைவோரை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரித்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரத் துறைக்குள் பெண் தொழில்முனைவோர் பெரும் பங்கை ஆற்ற முடியும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பெண் வர்த்தகர்கள் சமூகத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் அனைத்து விதமான ஆதரவையும்

தொடர்ச்சி P2

## மாணவர்களுக்கு முக்கிய அறிவித்தல்



வெப்பமான வானிலை மேலும் அதிகரிக்கக்கூடும் என்பதால் இன்று வியாழக்கிழமை (29) மற்றும் நாளை வெள்ளிக்கிழமை (01) பாடசாலை மாணவர்களின் வெளிப்புற செயற்பாடுகளை தவிர்க்குமாறு கல்வி அமைச்சு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, எந்தவொரு பாடசாலையிலும் பயிலும் மாணவர்கள் அதிக வெப்பநிலையின்போது வெளிப்புற விளையாட்டு பயிற்சி நடவடிக்கைகள் அல்லது விளையாட்டு நிகழ்வுகள் அல்லது வேறு எந்த வெளி நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாம் எனவும் கூறப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

“பராட்டே சட்டம் தொடர்பான திருத்தத்தை

## பாராளுமன்றத்தில் சமர்பிக்க எதிர்பார்ப்பு”



**தொழிற்றுறை மீது காட்டப்பட்ட அலட்சியத்தால், உற்பத்தித் திறன் குறைந்துள்ளது**

அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள ‘பராட்டே’ சட்டம் தொடர்பான திருத்தத்தை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுவதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## சபாநாயகர் மஹிந்த யாப்பாவுடன் சுவிஸ் தூதுவர் சந்திப்பு



இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் கலாநிதி சிறி வோல்ட் மற்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று புதன்கிழமை (28) பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

இதன்போது, இந்நாட்டில் நடைபெறவுள்ள தேர்தல்கள் குறித்து கலாநிதி சிறி வால்ட் சபாநாயகரிடம் கேட்டறிந்தார்.

ஜனாதிபதித் தேர்தல் சட்டரீதியாக கூறப்பட்டுள்ள முறைப்படி நடத்தப்படும் எனவும், அடுத்த வருடம் உரிய காலப்பகுதியில் பொதுத் தேர்தலும் நடத்தப்படும் எனவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வழமைக்குத் திரும்பியது இலங்கை விமானச் சேவைகள்




இலங்கை விமான சேவையின் செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பியுள்ளதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளது.

அரசியல் தலையீடுகள் காரணமாக விமானக் கொள்வனவு இரத்துச் செய்யப்பட்டமையினால் விமான நிறுவனம் தற்போதைய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக விமான சேவையின் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் புதன்கிழமை (28) ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை (27) மாத்திரம் 10க்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமானதுடன் கிட்டத்தட்ட 03

தொடர்ச்சி P2

## உத்திகவின் இடத்திற்கு முத்துகுமாரன



உத்திக பிரேமரத்ன தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததன் காரணமாக வெற்றிடமான உள்ள பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு எஸ்.சி.முத்துகுமாரனவை நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் போராட்டம்









நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் சம்மேளனம், முன்னெடுத்துள்ள தொடர்ச்சியான இரு நாட்கள் கொண்ட அடையாள வேலைநிறுத்தமும் கவனயீர்ப்பு போராட்டங்களும் புதன்கிழமை (28) முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த வேலைநிறுத்தமும் கவனயீர்ப்பு போராட்டங்களும் இன்று வியாழக்கிழமையும் (29) முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கமைய யாழ். பல்கலைக்கழகம், தென்கிழக்கு பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழக என்பவற்றில் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகம் ஊழியர் சங்கத்தின் புதன்கிழமை (28) காலை 11 மணியளவில் பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளிற்கு உரிய

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மொட்டுக் கட்சிக்கு உரிமையில்லை”

காலி மாவட்டத்தில் புதன்கிழமை (28) நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க,

“ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக்க எமது கட்சித் தலைவர்களே தீர்மானம் எடுத்தனர். எமது கட்சியின் தலைவர்கள் வழங்கிய அறிவுறுத்தலின் பிரகாரம் பாராளுமன்றத்தில் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக நியமிக்க ஆதரவளித்தோம். தற்போது பொருளாதார சவாலை வென்று நாட்டின் பிரச்சினைகளைத் தீர்த்து வருகிறார்.

ரணில் விக்ரமசிங்கவை நியமிப்பதற்கு பொஹொட்டுவ எடுத்த தீர்மானம் அந்த நேரத்தில் எடுக்கப்பட்ட சிறந்த முடிவாகவே கருதுகிறேன். இந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து இந்த நாட்டை மீட்பதற்கான திறன் வேறு எவருக்கும் இல்லை. அப்போது ஜனாதிபதி பதவியை ஏற்குமாறு பலரிடம் கேட்டபோது, மறுத்துவிட்டனர்.

அனுரகுமார திஸாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகிய இருவரும் இந்தப் பொறுப்பை ஏற்க விரும்பவில்லை. எனவே, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் திரு.ரணில் விக்ரமசிங்கவை ஆதரிப்பதே இந்த தருணத்தில் கட்சி என்ற வகையில் நாம் எடுக்க வேண்டிய சரியான முடிவு என நான் கருதுகிறேன். அவர் எந்த கட்சி, எந்த சின்னத்தில் போட்டியிட விரும்புகிறார் என்பது குறித்துக் கலந்தாலோசித்து முடிவு செய்யலாம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எப்போதுமே மக்களைப் பற்றியும் நாட்டைப் பற்றியும் சிந்தித்து முடிவுகளை எடுக்கும் கட்சியாகும். பஷில் ராஜபக்ஷ விரைவில் இலங்கை வருகிறார். அவர் இலங்கைக்கு வந்த பின்னர் கட்சி பொறிமுறையை பலப்படுத்தி கட்சியைப் பலப்படுத்துவார். அதன் பின்னரே ஜனாதிபதி தேர்தலில் எடுக்கப்படும் தீர்மானத்தைக் கூறுவோம்.

முதலில் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என சிலர் கூறுவது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், தேர்தலை நடத்துவது தொடர்பில் எவரும் தமது தனிப்பட்ட கருத்தைத் தெரிவிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

ஆனால், அரசியலமைப்பின் பிரகாரம் அடுத்ததாக ஜனாதிபதி தேர்தல் நடைபெற வேண்டும் எனவும் எனவே இந்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்த அரசாங்கம் நிச்சயமாகத் தயாராகி வருவதாகவும் அமைச்சர் கூறினார். அது சம்பந்தமாக சிலர் கூறும் கருத்துக்கள் குறித்துக் கவலைப்படத் தேவையில்லை என தெரிவித்துள்ளார்.

# “பராட்டே சட்டம் தொடர்பான திருத்தத்தை பாராளுமன்றத்தில் சமர்பிக்க எதிர்பார்ப்பு”

மேலும் அவர் தெரிவிக்கையில், நாடு ஒரு நிதிக் கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் பொருளாதாரமும் வலுவாக இருக்க வேண்டும். இந்த விடயத்தில் இலங்கை மத்திய வங்கிக்குக் கணிசமான அதிகாரம் உள்ளது. கடந்த காலத்தில் இலங்கையில் கருத்தாடலுக்கு உட்பட்ட பரேட்டா சட்டம் பற்றி குறிப்பிடுவதென்றால், இவ்விடயத்தில் மத்திய வங்கி, நிதி நிறுவனங்களின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதில் மாத்திரமே கவனம் செலுத்தியது.

நாட்டின் கையிருப்பு நிலை குறித்து மத்திய வங்கி கவனம் செலுத்தியதா என்று பல தரப்பினரும் கேள்வி எழுப்பினர். மேலும், விவசாயத்துறை 22 வீதம், 8 வீதம் வரையிலும், தொழிற்றுறை 38 வீதம், 32 வீதம் வரையிலும் வீழ்ச்சியடைந்துள்ளமைக் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 17 முறை கடன் பெற வேண்டியிருந்தது. அவ்வாறு செய்தாலும் பொருளாதாரத்தை மீட்க முடியவில்லை. நாம் பொருளாதாரத்தில், சேவைத்துறையை தொடர்ந்து விரிவுபடுத்தியுள்ளோம். தொழிற்றுறை மீது காட்டப்பட்ட அலட்சியத்தால், உற்பத்தித் திறன் குறைந்துள்ளது.

இரண்டு அரச வங்கிகளினால் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட கடன் தொகை சுமார் 602 பில்லியன் ரூபாவாகும். அதில் பெரும்பகுதியைத் திருப்பிச் செலுத்த முடியாததால் அறிவிடமுடியாக் கடனாகத் தள்ளுபடி செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது.

இந்தக் கடன் தொகையை நம் நாட்டில் விவசாயம் மற்றும் தொழில் துறைகளில் பயன்படுத்த முடிந்திருந்தால், அந்தத் துறைகளில் பெரும் வளர்ச்சியை எட்ட முடிந்திருக்கும். நாட்டில் நிதிக் கட்டுப்பாடு இல்லாததால்தான் இத்தகைய நிலை ஏற்பட்டது.

இங்கு வர்த்தகர்களும், நிதி நிறுவனங்களும் நெருக்கடியில் சிக்காத வகையில் செயல்பட வேண்டும். அதன்படி, பரேட்டா சட்டத்தால் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக, பாராளுமன்றத்தில் சில திருத்தங்களை முன்வைக்க எதிர்பார்க்கிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

# பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் போராட்டம்

கால அவகாசங்கள் வழங்கப்பட்டும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் இதுவரை தீர்வினை வழங்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் உடனடித் தீர்வினை வேண்டியும் வேலை நிறுத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக முன்னெடுத்த போராட்டத்தின் போது ஊழியர்களின் ஓய்வூதிய நிதிகளை கொள்ளையடிக்காதே, அரச பல்கலைக்கழக முறைமையை காப்பாற்று, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கு ஏற்ப சம்பள அதிகரிப்பை வழங்கு, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பிணக்குகளிற்கு தீர்வை வழங்கு உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# உத்திகவின் இடத்திற்கு முத்துகுமாரன

அனுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன சபாநாயகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி புதன்கிழமை (27) தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இந்நிலையில், உத்திக பிரேமரத்னவுக்குப் பிறகு, அதிக வாக்குகளை எஸ்.சி. முத்துகுமாரன பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேர்தல்கள் திணைக்களத்தின் ஒப்புதலுக்குப் பிறகு, முத்துகுமாரனாவின் பெயர் வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# நெருக்கடியில் பேக்கரி தொழில்

மாஜரின் மற்றும் வெண்ணெய் விலை 1,000 ரூபாவாக அதிகரித்துள்ளதுடன், ஒரு கிலோ கிராமின் விலை முறையே 3,000 ஆகவுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் சங்கத் தலைவர் கூறியதாவது, “இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் இன்னும் எங்களுக்கு வரவில்லை, மேலும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகளை தலா 60 ரூபாய்க்கு வாங்க வேண்டும். இது பேக்கரி தொழிலுக்கு கடுமையான அடியாகும்" என்று கூறியுள்ளார்.

எனவே, எதிர்வரும் தமிழ்-சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் பேக்கரி உற்பத்தியாளர்களுக்கு தேவையான பொருட்களின் விலைகளை குறைத்து சலுகைகளை வழங்குமாறு பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றது.

# மாணவர்களுக்கு முக்கிய அறிவித்தல்

இது தொடர்பில் அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் அறிவிக்குமாறு மாகாண மற்றும் பிராந்திய கல்வி அதிகாரிகளுக்கு ஏற்கனவே பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் சுகாதார அமைச்சும் கல்வி அமைச்சும் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைய



செயற்பட வேண்டும் எனவும் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இரு நாட்களுக்க மேல், வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் இரத்தினபுரி மாவட்டத்தின் சில பகுதிகளிலும் மனித உடலால் அதிகமாக உணரக்கூடிய வெப்பநிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வழமைக்குத் திரும்பியது இலங்கை விமான சேவைகள்

விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் இலங்கை சுதந்திர பணியாளர்கள் சங்கத்தின் செயலாளர் ஹசந்த யசரத்ன கருத்து வெளியிடுகையில்,

“தற்போது எங்களிடம் 24 விமானங்கள் உள்ளன. அதில் 18 விமானங்கள் மட்டுமே இயங்குகின்றன. மற்றையவையின் இயந்திரங்களில் பிரச்சினைகள் உள்ளன. இது இலங்கைக்கு மட்டுமல்ல, உலகில் உள்ள அனைத்து விமான நிறுவனங்களுக்கும் பொதுவான பிரச்சினையாகும். 2021இல் புதிய விமானங்களைக் கொள்வனவு செய்யத் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை திட்டமிட்டனர். அப்போது கோப் குழுவின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்களால் விமானங்களை வாங்குவது இரத்து செய்யப்பட்டன. அரசியல் பங்காக ஆக்கப்பட்டதால் அது இரத்து செய்யப்பட்டது. இந்த நேரத்தில் சுற்றுலா மிகவும் சிறப்பாக உள்ளது. உண்மையில் விமானங்கள் இருந்தால், செயல்பாடுகள் மிகவும் மதிப்புமிக்கதாக இருக்கும். விமானங்கள் இல்லாதது மிகப்பெரிய பிரச்சினையாகும்” என்றார்.

**“இந்த நேரத்தில் சுற்றுலா மிகவும் சிறப்பாக உள்ளது. உண்மையில் விமானங்கள் இருந்தால், செயல்பாடுகள் மிகவும் மதிப்புமிக்கதாக இருக்கும். விமானங்கள் இல்லாதது மிகப்பெரிய பிரச்சினையாகும்**

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் இலங்கை சுதந்திர பணியாளர்கள் சங்கத்தின் தலைவர் ஜனக விஜயபதிரத்ன தெரிவிக்கையில்,

“தேசிய விமான நிறுவனம் அரசு நிறுவனமாக இருந்தாலும் இந்த தொழிலை அரசு தொழிலாகச் செய்யமுடியாது. உடனடியாக முடிவெடுக்கும் சுதந்திரம் இருக்க வேண்டும். இன்று விமானம் தொழில்நுட்பக் கோளாற்றில் வேறு நாடுகளில் சிக்கினால் விமான பொறியியலாளர் ஒருவரை அந்நாட்டுக்கு அனுப்ப அமைச்சரின் அனுமதி தேவை. இந்த வியாபாரத்தைப் பற்றிய புரிதல் இல்லாத அமைச்சர்கள், கோப் குழு உறுப்பினர்கள் முடிவுகளை எடுப்பதால் தான் முழு நாடும் இன்று இந்த கதியை எதிர்கொள்கிறது.” என்றார்.

இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்க்க இலங்கைக்கு வழி உள்ளதா என்ற கேள்விக்குப் பதிலளித்த அந்த சங்கத்தின் செயலாளர் ஹசந்த யசரத்ன,

“சமீபத்தில், காத்திருப்புப் பட்டியல் அடிப்படையில் இரண்டு பெல்ஜிய விமானங்கள் வாங்கப்பட்டன. அதனால்தான் இந்த நடவடிக்கை வழக்கமாக மேற்கொள்ளப்படுகிறது. இன்று மாலைக்குள், அனைத்து தாமதங்களும் சீர்செய்யப்பட்டு, விமானச் செயல்பாடுகள் வழக்கம் போல் இடம்பெறும் என்று நாங்கள் நம்புகிறோம்.” என்றார்.

# விடுதலையான சாந்தன் மரணம்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த சாந்தன், கடந்த 2022ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற அறிவுறுத்தலின் பேரில் விடுவிக்கப்பட்டார். இலங்கைத் தமிழரான சாந்தன், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தார்.

கடந்த ஜனவரி மாதம் அவர் உடல்நிலை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதையடுத்து உயர் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு திருச்சி சிறப்பு முகாமில் இருந்த தனது மகனை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு இலங்கையிலுள்ள சாந்தனின் தாயார் மகேஸ்வரி உருக்கத்துடன் கடந்த ஆண்டு வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்த நிலையில் அவர் நாடு திரும்ப அண்மையில் மத்திய அரசு அனுமதி வழங்கி இருந்தது. அதற்குள் அவரது உயிர் பிரிந்துள்ளது.

# “பெண் தொழில் முனைவோரை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது”

வழங்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ‘சிறந்த பெண் தொழில்முனைவோருக்கான விருது விழா 2023’ இலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் கூறியுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி,

“கடந்த சில வருடங்கள் சுமுகமானதாக இருக்கவில்லை. வர்த்தகர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நெருக்கடியான காலகட்டமாக அமைந்திருந்தது. பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தொழிலை முன்னெடுத்துச் செல்ல நீங்கள் மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியது.

2024ஆம் ஆண்டில் ஓரளவு பொருளாதார வளர்ச்சி ஏற்படுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டின் கடைசி இரண்டு காலாண்டுகளில் சாதகமான பொருளாதார வளர்ச்சியை எம்மால் அடைய முடிந்தது. ஆனால் 2018 ஆம் ஆண்டிலிருந்த பொருளாதார வளர்ச்சியை இன்னும் எட்ட முடியாதுள்ளது. அதற்கு இன்னும் இரண்டு வருடங்கள் தேவைப்படும்.

கடந்து வந்த பொருளாதார நெருக்கடியின் பின்னர் நாட்டின் பொருளாதாரத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தும் முதல் வருடம் இதுவாகும். அதற்காகப் பல கடினமாகத் தீர்மானங்களையும் எடுக்க வேண்டியிருந்தது.

அனைவரும் வாழக்கூடிய பொருளாதார சூழலை உருவாக்க வேண்டும். தற்போது பணத்தை அச்சிடவோ, கடன் வாங்கவோ முடியாது. அதனால், வரி சேகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ரூபாயை பலப்படுத்தி, பணவீக்கத்தைக் குறைப்பதே எமது இலக்காகும்.

பழைய பொருளாதார அடிப்படையில் நாட்டை முன்னேற்ற முடியாது. அதனால், நாட்டில் விரைவான பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். ஒரு புதிய பொருளாதார முறையில் நாடு கட்டியெழுப்ப வேண்டும். அதற்காக போட்டித்தன்மை நிறைந்த ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். மேலும், அரசாங்கம் என்ற வகையில் வர்த்தகர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்கும். அதற்காகவே ‘பாராட்டே’ சட்டத் திருத்தச் செயற்பாடுகளும் இவ்வருட இறுதி வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

பெண் வர்த்தகர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பைச் செய்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் அரசாங்கம் வழங்கும்.

மேலும், பெண் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்காக உங்கள் சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பாராட்டுக்குரியது. பெண்களை வலுவூட்டுவதால் நாட்டின் பொருளாதாரத்தைக் கணிசமான அளவில் பலப்படுத்த முடியும். மேலும், பெண்களைத் தொழில்முனைவோராக மாற்றுவதற்கான விரிவான திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தியுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பெண்களால் பெரும் பங்காற்ற முடியும். எனவே, நாட்டின் பொருளாதார மாற்றத்திற்குப் பெண்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானது. எதிர்காலத்தில் டிஜிட்டல், பசுமைப் பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு பெண் தொழில் முனைவோரை தயார்ப்படுத்துவதற்கான திட்டத்தை அரசாங்கம் தயாரித்துள்ளது.

இன்று, பல பெண்கள் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அதேபோல், நாட்டின் சுற்றுலாத் துறையும் கணிசமாக முன்னேற்றம் கண்டுள்ளது. அதற்கான அதிக வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் வலுவான தொழில்முனைவோரை உருவாக்க முடியும்.

விவசாயத் துறையை நவீனமயமாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எதிர்காலத்தில் இத்துறைசார் தொழில் முனைவோருக்கு அதிக கேள்வி இருக்கும். உலகம் தொழில்நுட்பத்துடன் முன்னேறும்போது, நாமும் அதற்கமையவே முன்னேற வேண்டும்.

நாம் ஒரே இடத்தில் நிற்க முடியாது. புதிய தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடித்தளத்தை நாங்கள் ஏற்கெனவே அமைத்துள்ளோம். அந்தச் செயற்பாட்டைத் தொடர்ச்சியாக முன்னெடுத்தால் இலங்கையின் பொருளாதாரத்தை உயர் மட்டத்திற்குக் கொண்டு செய்யமுடியும்.

தற்போது மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனால் காணி உரிமை பெற்றுக்கொள்ளும் 20 இலட்சம் பேரின் பங்களிப்பு நேரடியாகப் பொருளாதாரத்திற்குக் கிடைக்கும் என்றார்.

# சிறுவன் துஷ்பிரயோகம்: சந்தேகநபருக்கு 7 வருட கடூழிய சிறை

■ ஆ .ரமேஷ்

நுவரெலியா பொலிஸ் பிரிவுட்குட்பட்ட வலப்பனை மத்துரட்ட பகுதியில் 14 வயது சிறுவன் ஒருவரை மூன்று முறை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு நுவரெலியா மேல் நீதி மன்றம் செவ்வாய்க்கிழமை (27) 7 வருட கடூழிய சிறை தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

HCR/05/2017 இலக்கம் கொண்ட இந்த வழக்கு 2017ஆம் ஆண்டு முதல் கடந்த ஏழு வருடங்களாக நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்ததுள்ளது .

இந்த நிலையில், குற்றவாளியாக இனங்காணப்பட்ட வலப்பனை - மத்துரட்ட பிரதேசத்தைச் சேர்ந்த மந்திலக்க திஸாநாயக்க 14 வயது சிறுவன் ஒருவரை மூன்று முறை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக இவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் தீர்ப்பை நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் வீரசூரிய செவ்வாய்க்கிழமை (27) மாலை வழங்கினார். இதன்போது குற்றவாளியாக இனங்காணப்பட்ட நபருக்கு எதிரான மூன்று வழக்குகளும் ஏழு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.



அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு 04 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் எனவும் இந்த தொகையை வழங்காத பட்சத்தில் மேலும் மூன்று வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கியுள்ளார் .

அதேநேரத்தில் நீதிமன்ற தண்டனை பணமாக 15 ஆயிரம் வழங்க வேண்டுமென அறிவித்த நீதிபதி இத் தொகையைச் செலுத்தாத பட்சத்தில் மேலும் மூன்று மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

# வாவியிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, தனியார் பேருந்து தரிப்பிடத்தின் அருகிலுள்ள வாவியில் உயிரிழந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் புதன்கிழமை (29) மீட்கப்பட்டுள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



புதிய காத்தான்குடி 6 ம் பிரிவு ஏ.எல்.எஸ். மாவத்தையைச் சேர்ந்த 49 வயதுடைய முகமது கனிபா முகம்மது அஸ்மி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

குறித்த நபர் சுகயீனம் காரணமாகப் புதன்கிழமை (29) வீட்டை விட்டு வெளியேறி மட்டு. போதனா வைத்தியசாலைக்குச் சென்ற நிலையில் வீடதிரும்பிவராததால் உறவினர்கள் அவரை தேடிவந்த போது வாவியில் சடலமாகக் காணப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸாரால் சடலத்தை மீட்டு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

# மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் மரணம்

■ ஆ.ரமேஸ்.

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹன்போல்ட் தோட்ட பிரிவான கிலனிகல்ஸ் தோட்டத்தில் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் புதன்கிழமை (28) இடம்பெற்றுள்ளது .



கிலினிகல்ஸ் தோட்டத்தைச் சேர்ந்த 56 வயதுடைய மதுரைவீரன் நாகராஜ் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேயிலைத் தோட்டத்துடன் இணைந்த பகுதியில் விவசாயம் செய்துவரும் குறித்த நபர் காட்டு மிருகங்கள் வருவதைத் தடுக்க சட்ட விரோதமாகப் பாய்ச்சப்பட்டுள்ள மின்சாரத்தில் சிக்கியே உயிரிழந்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# நீர்த்தேக்கம் அமைப்பதற்கு எதிர்ப்பு

■ நிலமேகம் பிரசாந்த்

நுவரெலியா - கொட்டகலை பிரதேச சபைக்கு உட்பட்ட தலவாக்கலை கிரேட்வெஸ்டன் பகுதியில் நீர்த்தேக்கம் அமைப்பதுக்கு எதிராக கிரேட்வேஸ்டன் தோட்ட மக்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று புதன்கிழமை (28) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கல்கந்த வத்த காட்டுமாரியம்மன் ஆலய வளாகத்திலிருந்து ஊற்றெடுக்கும் ஆற்றிலிருந்து வரும் நீரை லூசா, கல்கந்தை, ஸ்கல்பா மலைத்தோட்டம் ஆகிய பகுதி மக்கள் உபயோகப்படுத்தியிருந்த நிலையில், தலவாக்கலை பகுதிகளுக்கு நீரை மாற்றி அனுப்ப நீர்வழங்கள் அமைச்சின் ஊடாக செயற்பாடுகள் முன்னெடுத்து வருவதாகக் கூறியே குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.



இப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் மிகப்பெரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதாக கிரேட்வெஸ்டன் பகுதி மக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இவரை கண்டால் அறிவிக்கவும்



■ ஆ.ரமேஸ்

கந்தப்பளை - ஹைபொரஸ்ட், குருந்து ஓயா தோட்டத்தில் வசிக்கும் உடப்புஸலாவ-அலகொல தோட்டத்தைச் சேர்ந்த துரைசாமி சங்கர் (வயது 37) என்ற நபர் கடந்த 17.01.2024 திகதியிலிருந்து காணாமல் போயுள்ளதாக இவரின் வீட்டார் ஹைபொரஸ்ட் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

புத்தி சுவாதீனம் அற்ற இவரை தேடும் பணியில் ஹைபொரஸ்ட் பொலிஸார் ஈடுப்பட்டுள்ள நிலையில், இவரை கண்டவர்கள் இவர் தொடர்பான தகவலை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு ஹைபொரஸ்ட் பொலிஸார் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன், இவரை கண்டவர்கள் இவர் தொடர்பான தகவலை 0767135932,என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு குடும்பத்தார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## பாதசாரிகளுக்கு இடையூறு விளைவிக்கும்:

# அங்காடி கடைகள் அகற்றம்

■ பாறுக் ஷிஹான்

சம்மாந்துறை பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் பாதசாரிகளுக்கு பல்வேறு வழிகளிலும் இடையூற்றை ஏற்படுத்தி வருகின்ற பாதையோர அங்காடி வியாபாரிகளை அகற்றும் பணியில் சம்மாந்துறை பிரதேச சபை புதன்கிழமை (28) முதல் மேற்கொண்டு வருகின்றன.



சம்மாந்துறை பிரதேச மக்களின் கோரிக்கைக்கு அமைவாக சம்மாந்துறை நகரத்திலிருந்து அம்பாறை வீதி, மல்கம்பிட்டி வீதி பொலீஸ் வீதி மற்றும் கல்முனை வீதிகளின் இரு மருங்குகளிலும் தற்காலிக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர்களினால் பாதசாரிகள் மட்டுமல்லாது போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பல்வேறு வகையான வாகனங்களுக்கும் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தி வருவதுடன், வீதி விபத்துகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இவ்வாறான ஆபத்துக்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே முஹம்மட் தலைமையில் கல்முனை வீதி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸார், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், வர்த்தக சங்கம் உள்ளிட்ட ஒன்றிணைந்த குழுவினரால் இனங்காணப்பட்ட தற்காலிக அங்காடி வியாபாரிகளை அகற்றும் பணியை மேற்கொண்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தாமரை பறிக்கச் சென்றவர் நீருக்குள் மூழ்கி உயிரிழப்பு

■ அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை, பூநகர் - பணிச்சங்குளத்தில் தாமரைப் பூ பறிக்கச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள சம்பவம் புதன்கிழமை (28) இடம்பெற்றுள்ளது .

ஈச்சிலம்பற்று-பூமரத்தடிசேனை பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய கனகசுந்தரம் விவேகானந்தன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பனிச்சங்குளம் குளத்திற்குப் புதன்கிழமை (28) காலை நண்பருடன் தாமரைப்பூ பறிப்பதற்காக பைபர் படகில் இருவரும் சென்ற போது பைபர் படகு கவிழ்ந்ததாகவும், இதனையடுத்து தனக்குப் பாதுகாக்க முடியாத நிலையில் நீந்தி கரைக்கு வந்ததாகவும் சக நண்பர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

நீரில் மூழ்கி உயிரிழந்த நபரை திடீர் மரண விசாரணை அதிகாரியின் விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க உள்ளதாகவும் தெரியவந்துத்துள்ளது.



இச்சம்பவம் தொடர்பில் ஈச்சிலம்பற்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொங்கிறீட் இடிந்து விழுந்ததில் ஒருவர் மரணம்



மஹரகம - ஹைலெவல் வீதியில் பழைய கட்டிடம் ஒன்றின் கொங்கிறீட் இடிந்து விழுந்ததில் படுகாயமடைந்த இருவரில் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் உயிரிழந்துள்ளதாக மஹரகம பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

ஹோமாகம கெமுனு மாவத்தை, 326/B என்ற வீட்டில் வசித்த 45 வயதான சுகத் மரம்பகே என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மற்றும் ஏனையவர் பழைய கட்டிடம் ஒன்றின் ஜன்னலை அகற்றச் சென்றபோது, கட்டிடத்தின் கொங்கிறீட் பகுதி இடிந்து விழுந்ததில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# “குடிநீர் கிடைப்பதில்லை”: வீதிக்கு இறங்கிய மக்கள்

■ பி.கேதீஸ்

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிறேட்வெஸ்டன் கல்கந்தவத்தை தோட்ட மக்கள் தமது தேவைக்குக் குடிநீர் கிடைப்பதில்லை என புதன்கிழமை (28) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

2002 ம் ஆண்டு தேசிய வீடமைப்பு தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானால் அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தினூடாக தலவாக்கலை நகர மக்களுக்குத் தினசரி 24 மணி நேரமும் நீர் விநியோக வேலைத்திட்டம் என்ற வேலைத்திட்டத்தில் தலவாக்கலை கிறேட்வெஸ்டன் கல்கந்தவத்தை மலை அடிவாரத்தில் ஆரம்பமாகும் (கல்லாறு) ஆற்றை ஒரு பகுதி மறித்து அணையிட்டு அங்கிருந்து குழாய்கள் ஊடாக தலவாக்கலை நகருக்குச் சுத்தமான குடிநீர் வழங்கப்பட்டது.

சுமார் 21 வருடங்கள் கடந்துள்ள நிலையில் தற்போது நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினூடாக கல்கந்தவத்தை மலை அடிவாரத்தில் ஆரம்பமாகும் (கல்லாறு) ஆற்றின் அணையை ஒரு அடி உயர்த்தி தண்ணீரை சுத்திகரித்து மேலும் குழாய்களைப் பொருத்தி அதனூடாக தலவாக்கலை நகருக்குக் குடிநீர் வழங்க வேலைத்திட்டமொன்று தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் கல்கந்தவத்தை தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 250 குடும்பங்கள் பாதிக்கப்படுவதாக அத்தோட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்த வேலைத்திட்டத்தை உடனே நிறுத்துமாறும் முதலில் இங்கே வாழும் 250 குடும்பங்களுக்குச் சுத்தமான குடிநீரை வழங்கச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும்.

தமக்கு முதலில் குடிநீர் வழங்கிய பின்னரே யாருக்கு வேண்டுமானாலும் அணையிட்டு தண்ணீரைக் கொடுங்கள் என அத்தோட்டத்தைச் சேர்ந்த மக்கள்,பாடசாலை மாணவர்கள் மற்றும் இதர தொழிலுக்கு செல்வோர் ஒன்றிணைந்து நேற்று (28) கல்கந்தவத்தை வழிப்பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டுள்ளனர்.



# மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பில் தவறில்லை

இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கலாக சமூக வலைத்தளங்களிலும் பரவலாக பேசப்படுகின்றது.

நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், இவ்வாறான சம்பள அதிகரிப்பு வழங்கப்படுவது நியாயமானதா? இலங்கை மத்திய வங்கியில் பணியாற்றும் சிற்றூழியனுக்குக் கூட சுமார் ஒன்றறை இலட்சம் முதல் இரண்டு இலட்சம் ரூபாய் வரை சம்பளம் வழங்கப்படுகின்றது.

இது எந்த வகையில் நியாயம் என பல தரப்பினரும் கேள்வி எழுப்பியிருந்தனர். சாதாரணமான மக்கள் மத்தியில் அவ்வாறான எண்ணம் எழுவதில் தவறில்லை. அதுவே யதார்த்தம்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பாராளுமன்றத்துக்கு விளக்க அறிக்கையையும் சமர்ப்பித்துள்ளதுடன், சம்பள அதிகரிப்பு பற்றிய தெளிவுபடுத்தல்களை உள்ளடக்கிய ஊடக அறிக்கையையும் இலங்கை மத்திய வங்கியின் நிறைவேற்று அதிகாரிகள் சங்கம் வெளியிட்டிருந்தது.

நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், பல்வேறு அரச நிறுவனங்களில் மேலதிகக் கொடுப்பனவுகள் அடங்கலாகச் செலவுகளைக் கட்டுப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படுவதுடன், பொது மக்களையும் சிக்கனமான முறையில் தமது செலவுகளை மேற்கொள்ளுமாறு மத்திய வங்கியின் ஆளுநர் பொறுப்பேற்றிருந்த ஆரம்பக் காலத்தில் குறிப்பிட்டிருந்தமை நினைவிலுள்ளது.

ஆனாலும், மறுபுறம் இலங்கை மத்திய வங்கியில் பணியாற்றும் சிற்றூழியர் முதல் உயர் பொறுப்பிலுள்ள அதிகாரி வரையில் ஒவ்வொருவரின் பங்களிப்பும் நாட்டின் பொருளாதாரத்தைச் சீரமைப்பதற்கு முக்கியமானதாகும். வெவ்வேறு தொழிற்துறைகளின் செயற்பாடுகளில் மாத்திரம் நாட்டின் பொருளாதார

மீட்சி தங்கியிருப்பதில்லை. இலங்கை மத்திய வங்கி போன்ற நிதிக் கொள்கைகள் பற்றிய பொருளாதாரத்துடன் தொடர்புடைய முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளும் அமைப்பின் செயற்பாடுகளிலும் தங்கியுள்ளது.

இவ்வாறான நிலையில், நாட்டிலிருந்து புத்திஜீவிகள், கல்விமான்கள், நிபுணர்கள் புலம்பெயர்ந்து வரும் ஒரு நெருக்கடி நிலைக்கும் இலங்கை முகங்கொடுத்துள்ளது. இதற்கும் இந்த பொருளாதார நெருக்கடி காரணமாகும்.

இவ்வாறான நிலையில், இலங்கை மத்திய வங்கியில் பணியாற்றும் ஊழியர்களும் அவ்வாறான தீர்மானத்தை மேற்கொண்டு நாட்டை விட்டு வெளியேறினால், அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு மாற்று நபர்களைத் தேடுவது என்பது சுலபமான காரியமல்ல. எனவே, அவர்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இவ்வாறான ஊக்குவிப்புகள் வழங்கப்பட வேண்டும்.

இலங்கை மத்திய வங்கியில் சாதாரணமாக மூன்றாண்டுகளுக்கு ஒரு தடவை சம்பள சீராக்கம் மேற்கொள்ளப்படுவது வழமை. இந்த சீராக்கமும் அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிறைவேற்று அதிகாரிகளின் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் காணப்படும் வங்கிகள், நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களைக் கண்காணிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ள இலங்கை மத்திய வங்கியில் பணியாற்றுவோருக்கு வங்கிகளில் வழங்கப்படும் சம்பளத்தை விட உயர்வான தொகை வழங்கப்பட வேண்டியது கட்டாயமானதாகும். எனவே இந்த சம்பள அதிகரிப்பு தவறில்லை.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# நாகரிக அரசியலின் தேவை

மொஹமட் பாதுஷா

'கோவணம் கழன்று விழுவது கூட தெரியாமல், கோட்-சூட்டிற்காக நாம் சண்டையிட்டுக் கொண்டிருக்க முடியாது' என்று முற்போக்கு எழுத்தாளர் ஒருவர் எழுதியிருந்தார்.

அதாவது, அரசியல் என்றாலும் சரி, ஆன்மீகம் என்றாலும் சரி, சமூக வாழ்வு என்றாலும் சரி ஒவ்வொரு தனிமனிதனும் சமூகமும் எல்லாவற்றுக்கும் முன்னதாக நல்ல அடிப்படை பண்பியல்புகளோடும், ஒழுக்க விழுமியங்களோடும் தம்மை முதலில் தகவமைத்துக்கொள்ள வேண்டும்.

இலங்கைச் சூழலில் அரசியல்வாதிகள் சிலபோதுகளில் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நடந்து கொள்கின்ற விதங்களைப் பார்க்கின்ற போது, இதற்கான தேவை அரசியல் பரப்பில் இன்னும் அதிகரித்து வருவதை வெளிப்படையாகவே உணரக் கூடியதாக உள்ளது.

பாராளுமன்றத்தில் பல துறைசார்ந்தவர்கள் எம்.பிக்களாக அங்கம் வகிக்கின்ற போதிலும் கூட, க.பொ.த. உயர்தரம் மற்றும் சாதாரண தரம் சித்தியடையாத கணிசமானவர்களும் எம்.பிக்களாக இருந்ததாக இருப்பதாகப் பல தகவல்கள் ஏற்கெனவே வெளியாகியிருந்தன.

ஒரு சாதாரண அரச தொழிலுக்கே பல கல்வித் தகமைகள் கோரப்படுகின்ற நாட்டில், எம்.பிக்களாக தெரிவு செய்யப்படுவோர் இவ்வாறு குறைந்த கல்வித் தகுதியுடன் இருப்பது கவனிப்பிற்குரிய விடயம் என்பதை மறுக்க

முடியாது. ஆனாலும், கல்வி அறிவு மட்டுமே ஒரு நல்ல அரசியல்வாதியை உருவாக்கி விட மாட்டாது.

பிரதிநிதித்துவ அரசியலைப் பொறுத்தமட்டில் சான்றிதழை அடிப்படையாகக்கொண்ட தகுதிகளை விட, வேறுபல பண்புகள் முக்கியமானவை. குறிப்பாக, சமூக சிந்தனை, பொறுப்பும், பொறுப்புக்கூறலும்,

சோரம்போகாத தன்மை, நெஞ்சுறுதி, மக்களின் பிரச்சினைகள் பற்றிய தெளிவு, சமூகப் பிரச்சினையில் தைரியமாக முன்னிற்றல் என அப்பட்டியலில் பல விடயங்களை உள்ளடக்கலாம்.

இவற்றுக்கெல்லாம் மேலாக, இலங்கை போன்ற நாடுகளில் உள்ள அநேகமான பாராளுமன்ற உறுப்பினர்களிடையே பொது ஒழுக்கமும் நாகரிகமான அரசியல் கலாசாரமும் இன்னும் கட்டியெழுப்பப்பட வேண்டியிருக்கின்றது என்பதை நாம் பல தடவை நேரிடையாகவே கண்டு, உணர்ந்திருக்கின்றோம்.

அண்மையில். ஒரு குறிப்பிட்ட செயற்றிட்டம் தொடர்பில் அம்பாறை மாவட்ட எம்.பிக்கள் இருவரிடையே ஏற்பட்டிருந்த நானா நீயா போட்டி நாகரிக அரசியலைக் கடந்து, நடுச் சந்திக்கு வந்திருந்தது நினைவிருக்கலாம்.

ஏம்.பிக்கள் தமக்கிடையே விமர்சிப்பதும், பரஸ்பரம் வசைபாடுவதும் வழக்கமானதுதான். இதுவும் ஒரு வகை அரசியலாகவே இன்று மாறியிருக்கின்றது. ஆனால், மேற்படி அம்பாறை மாவட்ட விவகாரத்தில் ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே மற்றைய எம்.பிக்கு ஒரு 'புனைபெயர்' சூட்டினார்.

அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் முகநூலில் தோன்றிய மற்றைய முஸ்லிம் எம்.பி. தன்னை விமர்சித்த எம்.பிக்கு தன்பங்கிற்கு அவரும் ஒரு புனைபெயரை' வைத்தார்.

இதனைப் பார்ப்பதற்கு அவர்களது அரசியல் ஆதரவாளர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கலாம். அந்த ஒளிப்படத்தைப் பார்த்து அவர்கள் சிரித்துக்கொள்ளலாம். இதை விட மோசமான எத்தனையோ நிகழ்வுகள் நமது அரசியலில் இடம்பெற்றிருக்கின்றன என்பதையும் மறக்க முடியாது.

ஆனால், இவை ஒரு பண்பட்ட அரசியலின் அடையாளமல்ல என்பதை விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. இன்னும் சில மாதங்களில் இதனையெல்லாம் சம்பந்தப்பட்டவர்களே நினைத்து முகம் சுழிக்க, வெட்கப்பட நேரிடலாம்.

முஸ்லிம் எம்.பிக்கள் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் போட்டிப் போட்டுக்கொண்டு பாராளுமன்றத்தில் உரையாற்றியது கிடையாது. முஸ்லிம் தலைவர்களும் தளபதிகளும் தமது மக்களின் அபிலாசைகளை

அல்லது தங்களது பிரதேசங்களில் குறைகளை நிவர்த்தி செய்வதற்காகப் பாராளுமன்றத்திற்குள் உள்ளேயும் வெளியேயும் போராடியது கிடையாது.

இந்திய நடிகைகளை அழைத்து வந்து மலையக மக்களை சில தமிழ் அரசியல்வாதிகள் களிப்பூட்டியதைப் போல இல்லாவிட்டாலும், கிட்டத்தட்ட அதனை ஒத்ததாகவே முஸ்லிம் அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தில் கட்சிப் பாடல்களாலும், வீராப்புப் பேச்சுகளாலும் தமது சமூகத்தை உணர்ச்சியூட்டுகின்றனர் எனலாம். தேர்தல் காலத்தில் 'அம்பியாக' இருந்தோர்கள் பதவி கைக்குக் கிடைத்தால் மக்கள் விடயத்தில் 'அந்நியனாக' மாறி விடுவதைப் பல தடவை கண்டிருக்கின்றோம்.

பாராளுமன்றத்தில் கிரமமாக உரையாற்றாத, அந்த வரப்பிரசாதங்களை சமூகத்திற்காகப் பயன்படுத்தாத எத்தனையோ முஸ்லிம் எம்.பிக்கள் இதற்கு முன்னரும் இருந்தனர், இப்போதும் உள்ளனர். இப்படியே போனால், இனியும் உருவாகலாம்.

சில முஸ்லிம் எம்.பிக்களுக்கு சபையிலும் சபைக்கு வெளியிலும் தமது சமூகத்தின் பிரச்சினைகளை எவ்வாறு முன்வைப்பது, எப்படி ஏனைய சமூகங்களுக்குப் புரிய வைப்பது என்ற அடிப்படை நுணுக்கம் கூட தெரியாது.

தமிழ்ச் சமூகத்தின் பிரச்சினைகளைத் தெளிவாக,ஒரு கோர்வையாக முன்வைக்கின்ற எம்.பிக்கள் பலர் உள்ளனர்.

எஸ்.ஸ்ரீதரன், ஆர். சாணக்கியன் என பலரை உதாரணமாகக் கூறலாம். ஆனால், இப்படியாக முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளைத் தெளிவுறப் பேசக்கூடிய முஸ்லிம் எம்.பிக்கள் அரிது.

ஓரிருவர் அதற்காக முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். மீதமுள்ள முஸ்லிம் எம்.பிக்கள் பாம்புக்கும் நோகாமல் பாம்படித்த கம்புக்கும் நோகாமல், எழுவாயும் இல்லாமல் பயனிலையும் இல்லாமல், தொடர்பற்ற விடயங்களை தொடர்புப்படுத்திப் பேசிவிட்டுப் போகின்றனர்.

எந்தவித முன் தயார்ப்படுத்தலும் இல்லாமல் பாராளுமன்றத்திலும் வெளியிலும் விடயங்களைக் கையாள்வதைக் காண்கின்றோம்

பல முஸ்லிம் எம்.பிக்கள் பாராளுமன்றத்திற்கு வருகின்றார்களா? வந்தால் தூங்குகின்றார்களா? அல்லது எத்தனை முறை வருகைதந்துள்ளார்கள்? எத்தனை தடவை பேசினார்கள்? எப்போது கடைசியாகப் பேசினார்கள்? என்பது கூட தெரியாது. பாராளுமன்ற பதிவுகளில் இருந்துதான் அத்தவற்றைத் தேடி அறிய வேண்டியுள்ளது.

ஆகவே, சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகக் குரல்கொடுக்காமல், எதிரிகளுடன் போராடாமல் முஸ்லிம் மக்கள் பிறநிதிகள் அநாகரிகமான முறையில் தமக்குள் சண்டையிட்டுக் கொள்வதை நிறுத்த வேண்டும். அது முஸ்லிம் அரசியல் பற்றிய பிழையான விம்பத்தையே கட்டமைக்கும் என்பதை மறந்து விடக் கூடாது.

ஆனால், இந்தப் பண்பு முஸ்லிம்களின் அரசியலுக்கு மட்டும் உரியதல்ல. தேசிய அரசியலில் இதுபோன்ற நடத்தைக் கோலங்கள் பலமுறை வெளிப்பட்டிருக்கின்றது. தமிழர் அரசியலில் கூட அவ்வப்போது தலைகாட்ட முனைகின்றது என்பதை மறந்து விடக் கூடாது.

நமது பாராளுமன்றத்திற்குள் எம்.பிக்கள் சண்டித்தனம் புரிந்ததைப் பார்த்திருக்கின்றோம். ஆண்-பெண் எம்.பிக்களிடையே நாகரிகமற்ற உரையாடல்கள் நிகழ்ந்திருக்கின்றன. உயரிய சபையில் தெருச்சண்டை பிடித்த மக்கள் பிரதிநிதிகளைக் கண்டுள்ளோம். போதைப்பொருள், பெண்கள், கொலைகளுடன் தொடர்புபட்ட எம்.பிக்கள் பற்றிய கதைகளும் பரவலாக முன்வைக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்திற்கு வெளியே தமது கோவணங்கள் கழன்று விழுந்தது கூட தெரியாமல், கிரீடங்களுக்காக அலைந்த எம்.பிக்கள், தலைவர்கள், அரசியல்வாதிகளை நாம் மறந்து விடவில்லை.

துப்பாக்கிகளைப் பகிரங்கமாகக் காட்டி மிரட்டியவர்கள், கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்கள், போதைப்பொருள் வர்த்தகத்தின் காவலர்கள், பெரும் சண்டியர்கள், மனித உரிமை மீறல்கள் பலவற்றுக்குத்

துணை நின்றவர்கள் எம்.பிக்களாக, அமைச்சர்களாக, ஆட்சியாளர்களாக இருந்திருக்கின்றார்கள் என்பதும் கற்பனையல்ல.

ஆக, இந்தப் பண்பு முஸ்லிம் அரசியலில் மட்டுமன்றி இலங்கை அரசியலுக்கே பொதுவான ஒரு 'ட்ரெண்டாக',

போக்காக மாறியிருக்கின்றது. இதனை இப்போதே மாற்றியமைக்காவிட்டால், இதுதான் எதிர்காலத்தில் எழுதப்படாத அரசியல் நியதி என்றாகிவிடும்.

அதாவது நாகரிகமற்ற செயலில் ஈடுபடுதலும், சண்டித்தனமும், போதைப்பொருள் வர்த்தகமும், சபலப்புத்தியும், ஏமாற்றுதலும், டீல் செய்யும் திறனுமே ஒரு அரசியல்வாதிக்கான அடிப்படைத் தகுதிகளாக மாறிவிடும். அது நிகழ்ந்து விடாது தடுப்பதற்கு அரசியல்வாதிகளும் சமூகமும் முன்வர வேண்டும்.

இலங்கையைச் சிங்கப்பூராக, துபாயாக, ஐரோப்பாவாகப் பௌதீக அடிப்படையில் மாற்றியமைப்பதற்கு முன்னதாக,

அரசியல், சமூக அடிப்படையில் நமது பண்புகளை, நாகரிகத்தை,விழுமியங்களை அந்த நாடுகளில் உள்ளதைப் போல மாற்றி அமைப்பது அவசியமாகும்.



## வாழ்வியல் தரிசனம்

பிரதி உபகாரங்களை எதிர்பாராதவர்கள், ஆசைகள் அற்றவர்கள், பிறருக்கு உதவுவதில் பரந்த மனம் உள்ளவர்களாக இருப்பார்கள். தாங்கள் கொடுத்ததை விளம்பரம் செய்யாதவர்கள். உண்மையான கொடையாளிகள்.

ஏழைகளுக்கு வலிந்து உதவிகளைச் செய்தாலும் அதை ஏற்றவர்கள், பின்னர் அவர்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. சகல மக்களின் உழைப்பினால்தான் உலகம் வாழ்கின்றது. ஆனால், இன்னமும் ஏழை மக்களுக்கு உதவுபவர்கள் குறைந்தவர்களாகவே இருக்கிறார்கள். மனிதர் ஒருவரில் ஒருவர் சார்ந்து வாழ்வது இயற்கையானது.

தனித்து இயங்க முடியாது. எனவே, சகலரையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உருவாக வேண்டும். எல்லோருக்கும் எல்லாமும் கிட்டாது; இல்லாதவன் பெறுமதி அற்றவன் இல்லை.

வாழ்க்கைச் சுழற்சி சாதாரணமானது. எதனை எவரும் முழுமையாக உணர்கின்றார்களா? அறிந்தும் அறியாதவர்கள் போல, வாழ்கின்றவர்களே அநேகமானவர்களாக இருக்கின்றார்கள். யதார்த்த உண்மையை உணர்க.

நன்றி-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### சாலை ஆற்றினை துப்பரவு செய்யுங்கள்

முல்லைத்தீவு சாலை ஆற்றினை ஆழமாக்குமாறு இவ்வாற்று பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள கடற்றொழிலாளர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சாலை ஆறு நந்திக் கடலுடன் தொடர்புபட்டு உள்ளது. நந்திக் கடலில் எவ்வாறு கடற்றொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டுள்ளார்களோ அதேபோன்று சாலை ஆற்றிலும் பெருமளவு கடற்றொழிலாளர்கள் மீன், இறால் போன்ற கடல் உணவுகளை பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

2009ஆம் ஆண்டில் இப்பகுதியில் இடம் பெற்ற போர் காரணமாக அமைக்கப்பட்ட மண் அணைகள் பதுங்கு குழிகள் என்பன தற்போது கரைந்து சாலை ஆற்றில் சேறாக மாறி உள்ளதன் காரணமாக கடல் உணவுகளின் பெருக்கம் குறைந்து காணப்படுகின்றது.

சாலை ஆற்றினை துப்புரவு செய்வதன் மூலம் தேவிபுரம், இரணைப்பாலை, ஆனந்தபுரம், மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் பெரும் நன்மையடைவார்கள்.

தற்போது சாலை ஆற்றில் இருந்து ஆனந்தபுரம், இரணைப்பாலை கிராமங்களுக்கு உவர் நீர் உட்புகுந்து நன்னீர் கிணறுகள் உவராக மாறி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

- நடராசா கிருஸ்ணகுமார்





# வர்ணம்



றொசில்டாஅன்டன்

மல்லிகா கணவனை பிரிந்து பண்ணிரண்டு வருடங்கள். தனது இரு பிள்ளைகளுடனும் தனியே வாழ்ந்துவந்தாள். பிள்ளைகள் இருவரும் இரட்டையர்கள் வயது 16.

அவள் யாரிடமும் கையேந்தி வாழ விரும்பாதவள். தன் இருபிள்ளைகளையும் கஷ்டங்களுக்கு மத்தியில் நன்றாக படிக்க வைக்க வேண்டும். அரசாங்க வேலை செய்து அழகு பார்க்க வேண்டும் என்பதே அவளது கனவு .க.பொ.த சதாரண தரம் பரீட்சை நெருங்கிய நிலையில் இருவரும் படிப்பில் கவனமாக இருந்தார்கள்.

தனியார் வகுப்பிற்கு செல்லுமளவிற்கு வசதியில்லை என்பதால் ஒருவருக்கொருவர் உதவியாக பாடத்தில் உள்ள சந்தேகங்களை தீர்த்து கொண்டார்கள். மகனும் ,மகளும் மல்லிகாவிற்கு எந்த சிரமத்தையும் கொடுக்கவில்லை. "மகள் சரண்யா இன்டைக்கு அம்மாக்கு நிறைய வேலை இருக்கு அந்த வீட்டுக்காரம்மாட யாரோ விருந்தாக்கள் வாராங்களாம் சமையல் வேலை கூட நேரம் பிந்தும் நான் வர நீயும் சரணும் அங்க வந்து மத்தியான சாப்பாட்டை எடுத்து வந்து சாப்பிடுங்க நான் திறப்பை பூச்சாடிக்கு கீழ வைத்துட்டு போறன்"

"சரி அம்மா"

சரண்யாவும், சரணும் புத்தகங்களை கையில சுமந்து போறதை பார்த்ததும் மல்லிகாவுக்கு அழுகைதான் வந்தது. "தேசிய பாடசாலையில என் பிள்ளைகளும் படிக்கவைக்க ஆசைப்பட்டன் ஆனால் இந்த பாவி என்னை நடுத்தெருவில விட்டிட்டு போயிட்டான்" தனக்குள் கணவனை சபித்தவளாய் தனது வீட்டு வேலைகளை முடித்த விட்டு , வீட்டுக்கதைவை பூட்டி திறப்பை மறக்காமல் பூச்சாடிக்குக்கீழ் மறைத்தவளாய் நடையை வேகப்படுத்தினாள். "வீட்டுக்காரம்மா திட்டும்.. என்னதான் வேலையை நேர்த்தியாக செய்தாலும் வேலைக்காரிதானே என்று நம்மை மட்டமாகதான் நினைப்பா" தனக்குள் முணுமுணுத்தாள். சுற்றுமதில் கட்டிய மாளிகை போன்ற வீடு முன்கதவு பெல் சத்தமிட தோட்டத்தில் வேலை செய்யும் முருகையா கதவை திறந்தார். ''வணக்கம் அண்ணே"

"வணக்கம் மல்லிகாம்மா"

"இன்டைக்கு வேலை கூட அண்ணே பதட்டமாகவே இருக்கு சமையல நினைச்சித்தான்"

"சரி சரி டக்கண்டு போங்கம்மா அது வந்திச்சியெண்டா பேய் மாதிரி கத்தும்"

வீட்டிற்குள் நுழைந்ததுமே..."லட்சுமியம்மா வணக்கம் என்னம்மா இன்டைக்கு சமையல்"

"கத்தரிக்காய் பொரியல், இறைச்சி பிரட்டல், கோழிக்கறி, கிழங்குப் பொரியல், சோறு சமைச்சுட்டு கரட், லீக்ஸ், முட்டை போட்டு பிரட்டி எடு மல்லிகா ... சாப்பாட்டு மேசையில அழகாக வைச்சிட்டு மாடில இருக்கிற உடுப்புகளை மெசின்ல போடு. இரண்டு மணிக்கு சொந்தக்காரங்க வாராங்க மூன்று நாளும் இங்கதான் இருப்பாங்க..வேலையை போய் தொடங்கு"

படபடவென்று அத்தனை வேலையையும் ஒரே நிமிடத்தில் ஒப்புவித்துச் சென்றாள் வீட்டுக்காரம்மா..

தனியாக மாடு மாதிரி வேலை செய்த களைப்புடன் வீடு வந்து சேர எட்டு மணியாச்சு.

குளித்து தனது ஆடைகளை கழுவி காயப்போட்டவள் இரவு சாப்பாடு செய்யனும் என்று தன்னை ஆயத்தப்படுத்தினாள். இரட்டையர்களில் சரண்யா முதலாவதாக பிறந்தப்படியால் அவள் தம்பியின் அனைத்து வேலைகளையும் செய்வாள். பாடசாலைச் சீருடையையும் அவளே சேர்த்துக் கழுவி காயப்போடுவாள். இருவரின் பாடசாலை சப்பாத்து வேற தையல் பிரிந்த நிலையில் பரிதாபமாக காட்சியளித்தது.

சரண் அம்மாவிடம் வந்தான்.

"அம்மா நாங்க படிச்சு வேலைக்கு போகும் போது நீங்க இந்த வீட்டு வேலையை விடுங்கம்மா பாவம் கஷ்டம் தானே"

"இல்ல மகன் நீங்க படிப்பில மட்டும் கவனமாக இருங்க..போய் முன்னுக்கு இருங்க..புட்டு அவிச்சு தாரன் லட்சுமியம்மா கறி கொஞ்சம் தந்தவ"

நித்திரை கொள்ளும் நேரம் கூட அவளால் நிம்மதியாக நித்திரை கொள்ள முடியல கடந்த கால நினைவுகள் மனத்திரையில்.......

மல்லிகா செல்லமாக வளர்ந்த வீட்டிற்கு ஒரே பிள்ளை.

அவளுடைய அப்பா தோட்ட காணியில் வேலை செய்பவர். அவர்களுக்கு என்று சிறிய அழகான வீடு சொந்தமாய் இருந்தப்படியால கவலையின்றி வாழ்ந்தார்கள். அதிகம் படிக்க வசதியின்மையால் மல்லிகாவின் பெற்றோர் நல்ல வரன் என்று வந்ததை செய்து வைத்தார்கள்.

காலம் செல்லச் செல்ல அவனின் குணத்தின் உண்மையை கண்டறிந்தார்கள். வேலைக்கு போகமாட்டான். பச்சைக்குடிக்காரன் பெறுமாசம் மல்லிகாவின் நிலையை சிறிதும் எண்ணிப்பார்க்காமல் அவளை அடித்து துன்புறுத்தியதால் மல்லிகாவின் பெற்றோர் அவனை துரத்தியே விட்டார்கள்.

பாவி எங்கே போய் தொலைந்தான் என்றே தெரியவில்லை. காலங்கள் விரைந்தன மல்லிகாவின் பெற்றோரின் இழப்பிற்கு பின் அவள் குழந்தைகளுடன் தனித்து விடப்பட்டாள். சிறிய வீடு என்றாலும் சொந்த வீடு என்பதால் நிம்மதியாக இரண்டு குழந்தைகளுடன் வாழ்ந்தாள். "அம்மா தூங்கலயா" சுய நினைவுக்கு வந்தவளாய் கண்களை இறுக மூடிக்கொண்டாள்.

விடியும் போது எழும்பவே முடியாதளவிற்கு உடம்பு வலி அன்று சனிக்கிழமை சரண்யாவும், சரணும் வீட்டை சுத்தம் செய்து அம்மாவின் வேலைப் பளுவைக் குறைத்தார்கள். கோழிக் கூட்டையும் சேர்த்தே துப்புரவு செய்தார்கள். முட்டைகளை கூடையில் பத்திரமாக சமையலறையில் கொண்டு போய் வைத்தார்கள். தோட்டத்தில் உள்ள கொச்சி செடிகளுக்கும், பூ மரங்களுக்கும் தண்ணீர் பாய்ச்சினார்கள். இதுவும் அவர்களின் மேலதிக வருமானம்.

அந்த குடும்பத்தின் சிறிய முயற்சி. இரு நல்லப் பிள்ளைகளைத் தந்த கடவுளுக்கு தான் நன்றி சொல்லனும் மல்லிகா மனதினுள் கடவுளுக்கு நன்றி சொன்னாள்.

"பாடசாலை சீருடைகள் இரண்டும் வெளிறிப்போய் விட்டது புதுசாக தைக்கணும் பரீட்சைக்கு முன் தைச்சுக் கொடுத்தால் இரண்டு பேரும் சந்தோசப்படுவாங்க இரண்டு மாசம் தான் இருக்கு பரீட்சை நாளும் நெருங்கிட்டு துணி வேற சரியான விலை லச்சுமியம்மாட்ட காசு கேட்கணும் சப்பாத்தும், சொக்சும் சேர்த்தே வாங்கினால் தான் உயர் தரம் படிக்கும் போது செலவும் குறையும்"

தனக்குள்ளே கதைத்துக் கொண்டாள்.

எட்டு மணிக்கே வேலைக்கு புறப்பட்டாள். வழமை போல வேலைகளை நிறைவு செய்தவள் இரவு ஏழு மணி போல விடைப்பெறும் நேரம் அம்மா எனக்கு சம்பளத்தில் பத்தாயிரம் தாங்கம்மா பிள்ளைகளுக்கு யூனிபோர்ம் தைக்கனும் "சரி சரி நாளைக்கு வந்து கேளு தாரன்" எப்ப விடியும் என்றிருந்தது.

ஆனால் பணம் கேட்டு இருபது நாளைக்குப் பிறகே சம்பளப் பணம் கைக்கு கிடைச்சது.

முதல் வேலையாக பிள்ளைகளுக்கு தேவையான யூனிபோர்ம் துணி சப்பாத்துகள், சொக்ஸ் எல்லாம் வாங்கி வந்தவள் மகிழ்ச்சியுடன் பிள்ளைகளிடம் வாங்கி வந்தவற்றை காட்டி மகிழ்ந்தாள்.

நாட்கள் விரைந்தன. பரீட்சை நாளும் வந்தது. "புதிய யூனிபோர்ம், சாப்பத்துடன் பிள்ளைகள் தாயிடம் ஆசீர்வாதம் பெற்று பரீட்சைக்காக விடைப் பெற்றார்கள்.

"என் கண்ணே பட்டிடும் புதுசாக ஸ்கூல் போற மாதிரியே இருந்திச்சு"முருகையாவிடம் சொல்லி பெருமைப்பட்டாள். பரீட்சையின் கடைசி நாள்

"சரண்யா கண்ணு இன்டைக்கு டெஸ்ட் முடிஞ்சதும் யூனிபோர்மை கழுவி கவனமாக எடுத்து வையம்மா உங்கட ரிசால்ஸ் வந்ததும் ஏ.எல் வகுப்பிற்கு போடனும் தானே"

சரண்யாவும் "சரி அம்மா" என்றாள். பரீட்சை மண்டபத்தில் கடைசி நாள் என்பதால் அன்று மாணவர்கள் கலர் அடித்து பெரிய ஆர்பாட்டம் செய்தார்கள். சரண்யாவும், சரணும் தங்கள் யூனிபோர்மை பாதுகாக்க பெரும்பாடுப்பட்டார்கள்.

ஐந்து மணிக்கே வேலைகளை முடித்து விட்டு மல்லிகா வீட்டிற்கு வந்தாள்.

குளித்து விட்டு துணிகளை காய போடகொடியில் இருந்த துணிகளை அகற்ற போனவளுக்கு அதிர்ச்சி அங்கே புதிய யூனிபோர்ம் கொடியில் அவளை பார்த்து ஏளனமாய் சிரித்தது. (முற்றும்)

## விருது வழங்கும் நிகழ்வு



இலங்கை தேசிய கட்டுமான சங்கத்தின் 27வது வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று ஜனா பீச் ஹோட்டலில் திங்கட்கிழமை (26) இடம்பெற்றது.

தேசிய கட்டுமான சங்கத்தின் அம்பாறை , கல்முனை கிளையின் ஏற்பாட்டில் அதன் தலைவர் கே.எம்.சக்கரியா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கட்டிட மற்றும் நிர்மாணத்துறையில் நேர்த்தியாகவும், சிறந்த முறையிலும் பணிகளை முன்னெடுத்த 8 நிறுவனங்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

- எஸ்.அஷ்ரப்கான்



## மாற்றுதிறனாளிகளுக்கான கலை கலாச்சார நிகழ்வு



மாற்றுத்திறனாளிகளுக்கு சமூக உள்வாங்கலை உறுதிப்படுத்துவதற்காக கலை கலாச்சார நிகழ்வு மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக் தலைமையில் மூதூர் கலாச்சார மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (27) நடைபெற்றது. இந்நிகழ்வில் தம்பலகாமம், மூதூர், கிண்ணியா, கந்தளாய் பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள மாற்றுதிறனாளிகள் பங்கு பற்றியதுடன் அவர்களின் கலை நிகழ்ச்சிகளும் மேடையை அலங்கரித்தன.


- அ.அச்சுதன்







## தாய்மொழி தின நிகழ்வு





மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம் சர்வதேச தாய்மொழி தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்த சர்வதேச தாய்மொழி தின நிகழ்வு பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில், பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (27) இடம்பெற்றது இதன்போது 'நம் தாய்மொழியை பேணுதல் ஒரு பன்முக நோக்கு' எனும் தலைப்பின் கீழ் தென்கிழக்கு பல்கலைக்கழக பிரதி பதிவாளர் சஞ்சீவி சிவகுமார் அவர்களினால் சிறப்புரை நிகழ்த்தப்பட்டதுடன், பிரதேச கலைஞர்களின் பாடல்கள் மற்றும் கணேஷா கலைக்கழக மாணவர்களின் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன. - எம். எஸ். எம். நூர்தீன்

## Online Payment System அங்குரார்ப்பணம்

கல்முனை மாநகர சபைக்கான கொடுப்பனவுகளை இணைய வழி ஒன்லைன் மூலம் செலுத்துவதற்கான Online Payment System செவ்வாய்க்கிழமை (27) மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த Online Payment System மூலம் கல்முனை மாநகர சபைக்குரிய சோலை வரி உள்ளிட்ட சேவைக் கட்டணங்களை பொது மக்கள் மாநகர சபைக்கு வராமலேயே □□□.□□□.□□□2020.lk எனும் இணையத்த ளத்தினுள் பிரவேசிப்பதன் மூலம் ஒன்லைன் ஊடாக இலகுவாக செலுத்திக் கொள்ள முடியும் என தெரியவந்துள்ளது.

- பாருக் ஷிஹான்





## குடிநீர் திட்டத்தை மக்கள் மயப்படுத்தும் நிகழ்வு

கண்டி மாவட்டத்துக்குட்பட்ட கலஹா – தெல்தோட்டை பல்லேகம பகுதியில் வாழும் மக்களுக்கு சுத்தமான குடிநீரை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இ.தொ.காவின் உப தலைவரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமியின் முயற்சியால் மேற்படி பகுதியில் வாழும் மக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

குடிநீர் திட்டத்தை மக்கள் மயப்படுத்தும் நிகழ்வில் அல்நூர் தொண்டு நிறுவனத்தின் தலைவர் அலியார், அந் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரகு இந்திரகுமார், பலேகம பள்ளிவாசல் தலைவர், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

- எஸ்.கணேசன்



மத்திய பிரதேசம்

# தெருநாய்கள் தாக்கியதில் 2 வயது சிறுவன் உயிரிழப்பு

மத்திய பிரதேசம் மாநிலம் பத்வானியில் தெருநாய்கள் தாக்கியதில் 2 வயது சிறுவன் உயிரிழந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உயிரிழந்த சிறுவனின் வீட்டுக்கு அருகில் ஆட்டிறைச்சி சந்தை உள்ளது. இதனால் அந்த பகுதியை சுற்றிலும் தெருநாய்கள் நடமாட்டம் அதிகமாக இருந்துள்ளன. இந்நிலையில், சம்பவத்தன்று சிறுவன் வீட்டை விட்டு வெளியே சென்றபோது, சிறுவனை சுற்றி வளைத்த தெருநாய்கள் பயங்கரமாக தாக்கியுள்ளன.

அப்போது விரைந்து சென்ற சிறுவனின் பாட்டி, நாய்களின் பிடியில் இருந்து சிறுவனை விடுவித்தார். ஆனால், அதற்குள் சிறுவன் பலத்த காயமடைந்தான். இதையடுத்து, உடனடியாக சிறுவனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். ஆனால், செல்லும் வழியில் சிறுவன் உயிரிழந்தான்.

இந்த சம்பவம் குறித்து முனிசிபல் கார்ப்பரேஷன் சி.இ.ஓ. குஷால் சிங் துத்வே, “நாய்களை பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால்,



தெருநாய்களின் எண்ணிக்கை மிக அதிகம். அவற்றைப் பிடிப்பது சற்று கடினம். நாய்களை பிடிக்கும் போது, நாய் பிரியர்களும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. இருப்பினும், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க நடவடிக்கை எடுப்போம்” என தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேசத்தில் தெருநாய்களின் தாக்குதல்கள் மற்றும் அதனால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த ஜனவரி 23ஆம் திகதி மட்டும் குவாலியரில் தெருநாய்கள் 548 பேரைக் கடித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

திருப்பூர்

# மோடியை நோக்கி பறந்து வந்த செல்போன்

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே மாதப்பூரில் நடந்த ‘என் மண் என் மக்கள்’ பாதயாத்திரையின் நிறைவு விழா பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்றார். முன்னதாக பொதுக்கூட்ட மேடைக்கு திறந்த ஜீப்பில் பிரதமர் மோடி, மத்திய மந்திரி எல்.முருகன், தமிழக பா.ஜனதா தலைவர் அண்ணாமலை ஆகியோர் ஊர்வலமாக வந்தனர்.

பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற மக்கள், மலர் தூவி பிரதமருக்கு வரவேற்பு அளித்தனர். இவ்வாறு மலர் தூவியபோது, மலர்களுடன் செல்போன் ஒன்று பறந்து வந்து பிரதமர் மோடி வந்த ஜீப் மீது விழுந்தது. இதை மத்திய மந்திரி எல்.முருகன், தலைவர் அண்ணாமலை பார்த்து பதறினர்.

இதை கவனித்த பிரதமர் மோடி தனது பாதுகாவலரிடம் சைகை காட்டி செல்போனை எடுக்க கூறினார். அவர் ஜீப் மீது ஏறி செல்போனை எடுத்து அங்கிருந்த காவலர்களிடம் ஒப்படைத்தார். இதனால் அங்கு திடீர் பரபரப்பு ஏற்பட்டது.

விசாரணையில் மலர் தூவும்போது செல்போன் தவறி விழுந்தது தெரியவந்தது. அதன்பிறகு உரியவரிடம் செல்போனை ஒப்படைத்தனர்.



## அண்ணன் - தங்கை திருமணம்

இந்தியாவை சேர்ந்த பழங்குடியின சமூகமான “துருவா” என்ற பழங்குடி சமூகம் ஒன்று உள்ளது.

இந்த துருவா பழங்குடி இனத்தின் வழக்கத்தின்படி, ஒரே தாய் வயிற்றில் பிறந்த ஆண்களும், பெண்களும் திருமணம் செய்துக்கொள்கின்றனர். ஆதாவது அண்ணன் - தங்கை, அக்கா- தம்பி ஆகிய உறவு முறைகளில் திருமணம் செய்துக்கொள்கின்றனர்.

இங்கு ஏன் இப்படிஒரு கலாசாரம் பின்பற்றபடுகிறது என்பது குறித்து எந்த விளக்கமும் இல்லை. ஆனால், யாரேனும் தங்கள் சகோர, சகோதரிகளை திருமணம் செய்ய மறுத்தால் அவர்களுக்கு கடும் தண்டனை விதிக்கப்படுகிறது.

இந்த பழங்குடியின சமூகத்தின் கலாச்சாரம் குறித்து கடும் எதிர்ப்புகள் இருந்தாலும் தங்கள் இனத்தில் மக்கள் தொகை பெருக்கத்திற்காக அவர்கள் அத்தகைய நடைமுறையை பின்பற்றுவதாக கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான்

# முதல் பெண் முதலமைச்சர்

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் மகள் மரியம் நவாஸ், பஞ்சாப் மாகாணத்தின் முதலமைச்சராக பதவியேற்றுள்ளார். இதன்மூலம் பாகிஸ்தான் வரலாற்றில் முதல் பெண் முதலமைச்சர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்

பாகிஸ்தான் பாராளுமன்றம் மற்றும் பஞ்சாப் உள்ளிட்ட 5 மாகாண சட்ட சபைகளுக்கும் பொதுத்தேர்தல் கடந்த 8ஆம் திகதி நடந்தது. இதில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. பஞ்சாப் மாகாண சட்டசபைக்கு நடந்த தேர்தலில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றது. பாகிஸ்தான் மக்கள் கட்சி மற்றும் சுயேட்சைகள் மரியம் நவாஸ் ஷெரீபுக்கு ஆதரவு தந்தனர்.

மூன்று முறை பிரதமராக பதவி வகித்த நவாஸ் ஷெரீப்பின்



மகள் மரியம் நவாஸ் பஞ்சாப் மாகாணத்தின் முதல் பெண் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிலையில், கூட்டணிக் கட்சிகளான பாகிஸ்தான் மக்கள் கட்சி, பாகிஸ்தான் முஸ்லிம் லீக் -கியூ மற்றும் இஸ்டேகாம்-ஐ-பாகிஸ்தான் கட்சி ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ளார் மரியம் நவாஸ்.

50 வயதான மரியம் நவாஸ் தனது தந்தையும், பாகிஸ்தான் முன்னாள் பிரதமருமான நவாஸ் ஷெரீப் மற்றும் பாகிஸ்தானின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்கவுள்ள தனது சித்தப்பா ஷாபாஸ் ஷெரீப் ஆகியோரது முன்னிலையில், ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்ச்சியில் பஞ்சாப் முதல்வராகப் பதிவியேற்றார்.

இதைத் தொடர்ந்து உரையாற்றிய மரியம் நவாஸ், “எனது தந்தை அலங்கரித்த பதவியில் நான் பொறுப்பேற்றிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது இதே போல, பெண்கள் தலைமைப் பதவியேற்கும் சூழல் எதிர்காலத்திலும் தொடரும் நம்பிக்கை வந்துள்ளது, எதிர்க்கட்சிகளை பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டேன்” என தெரிவித்துள்ளார்.

ஜேர்மனி

# மீன் தொட்டியில் மர்மமான ஒலி

## ஆய்வில் வெளிவந்த உண்மை

ஜேர்மனியின் தலைநகர் பெர்லின் நகரில் ஒரு ஆராய்ச்சி கூடத்தில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் வினோத ஒலி கேட்டுள்ளது. இதற்கான காரணத்தை கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிரமாக முனைந்தனர்.

இதில், டேனியோனெல்லா செரிப்ரம் (Danionella cerebrum) எனும் மிகச் சிறிய வகை மீன் ஒன்று அதன் அங்கங்களில் ஒன்றான “ஸ்விம் ப்ளாடர்” (swim bladder) எனும் உறுப்பில் இருந்து சக்திமிக்க சீரான ஒலியை உண்டாக்குவது தெரியவந்துள்ளது.

இந்த மீன் வெளிப்படுத்தும் ஒலியின் அளவு மீன் தொட்டியின் நீர் நிலைகளில் 140 டெசிபெல் (decibel) என பதிவாகியுள்ளது. இது ஒரு துப்பாக்கி சூட்டின் ஒலிக்கு நிகரானது என்பது குறிப்பிடத்தக்கது.

“12 மில்லிமீட்டர் நீளம் மட்டுமே உள்ள இந்த டெனியோனெல்லா மீன் எழுப்பும் ஒலிதான் உலகின் அனைத்து வகை மீன் இனத்திலும் எழுப்பப்படும் அதிகமான ஒலியாகும். “டிரம்மிங்” (drumming) எனப்படும் இத்தகைய ஒலியானது ஒரு வகையான செய்தி பரிமாற்றம்”



என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், “டெனியோனெல்லா மீன்களின் உடல் கண்ணாடி போன்று ஒளி - ஊடுருவும் தன்மை கொண்டதால் அவை உயிருடன் இயங்கும் போதே ஆராய்ச்சி செய்வது எளிதாக இருந்தது.” என தெரிவித்துள்ளனர்

துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில்

# நான்காமிடத்துக்கு முன்னேறிய றூட்



சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் மூன்றாமிடத்துக்கு இங்கிலாந்தின் ஜோ றூட் முன்னேறியுள்ளார்.

இந்தியாவுக்கெதிரான நான்காவது டெஸ்டில் 133 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே ஐந்தாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தை றூட் அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.கேன் வில்லியம்சன், 2.ஸ்டீவ் ஸ்மித், 3.ஜோ றூட், 4. டரைல் மிற்செல், 5.பாபர் அஸாம், 6.உஸ்மான் கவாஜா, 7.திமுத் கருணாரத்ன, 8.மர்னுஸ் லபுஷைன், 9.விராட் கோலி, 10.ஹரி ப்ரூக்.

மேற்குறித்த போட்டியில் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியமையைத் தொடர்ந்து சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் ஏழாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி நான்காமிடத்தை றூட் அடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாரு,

1.இரவீந்திர ஜடேஜா, 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3.ஷகிப் அல் ஹஸன், 4.ஜோ றூட், 5. அக்ஸர் பட்டேல்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.ஜஸ்பிரிட் பும்ரா, 2.இரவிச்சந்திரன் அஷ்வின், 3.ககிஸோ றபாடா, 4.பற் கமின்ஸ், 5.ஜொஷ் ஹேசில்வூட், 6.இரவீந்திர ஜடேஜா, 7.பிரபாத் ஜெயசூரிய, 8.நேதன் லையன், 9.கைல் ஜேமிஸன், 10.ஜேம்ஸ் அன்டர்சன்.

இந்நிலையில் இலங்கைக்கெதிரான மூன்றாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதோடு 16 ஓட்டங்களைப் பெற்ற மொஹமட் நபி, சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் நான்காமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.ஷகிப் அல் ஹஸன், 2.வனிடு ஹசரங்க, 3.மொஹமட் நபி, 4.ஏய்டன் மார்க்ரம், 5.மார்க்கஸ் ஸ்டொய்னிஸ்.

இதேவேளை, நியூசிலாந்துக்கெதிரான இரண்டாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியாவின் ஜொஷ் ஹேசில்வூட், பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் 13ஆம் இடத்திலிருந்து ஆறு இடங்கள் முன்னேறி ஏழாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.அடில் ரஷீட், 2.வனிடு ஹசரங்க, 3.மகேஷ் தீக்‌ஷன, 4.அகீல் ஹொஸைன், 5.அக்ஸர் பட்டேல், 6.ரவி பிஷ்னோய், 7.ஜொஷ் ஹேசில்வூட், தப்ரையாஸ் ஷம்சி, 9.பஸல்ஹக் பரூக்கி, 10.மிற்செல் சான்ட்னெர்.

முதல் 10 துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.சூரியகுமார் யாதவ், 2.பில் ஸோல்ட், 3.மொஹமட் றிஸ்வான், 4.பாபர் அஸாம், 5.ஏய்டன் மார்க்ரம், 6.யஷஸ்வி ஜைஸ்வால், 7.றீலி றொஸோ, 8.பின் அலென், 9.ஜொஸ் பட்லர், 10.றீஸா ஹென்ட்றிக்ஸ்.


# டி கியாவைக் கைச்சாத்திடும் பார்சிலோனா?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்னாள் கோல் காப்பாளரான டேவிட் டி கியாவைக் கைச்சாத்திடுவது குறித்து பார்சிலோனா கருத்திற் கொள்வதாகக் கூறப்படுகிறது.

கடந்த பருவகாலத்தில் ஒப்பந்தம் முடிவடைந்த பின்னர் யுனைட்டெட்டிலிருந்து விலகியதைத் தொடர்ந்து 33 வயதான டி கியா வேறெந்தக் கழகங்களுக்கும் இன்னும் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்கெவியைப் பிரதியிடும் இன்ஸாகி?




ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவானது முகாமையாளர் ஸ்கெவியை இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனின் முகாமையாளர் சைமன் இன்ஸாகி மூலம் பிரதியிட ஆர்வம் காட்டுகிறது.

நடப்புப் பருவகாலத்துடன் பார்சிலோனாவின் முகாமையாளர் பதவியிலிருந்து ஸ்கெவி விலகுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்துக்கெதிரான ஐந்தாவது டெஸ்டிலும்

# லோகேஷ் ராகுல் இல்லை?



இங்கிலாந்துக்கெதிரான ஐந்தாவது டெஸ்ட் போட்டியிலும் இந்தியாவின் லோகேஷ் ராகுல் விளையாடுவது சந்தேகத்துக்கிடமானதாகக் காணப்படுகிறது.

மேலும் சில வீரர்களுக்கு ஓய்வளிப்பது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, தேர்வாளர்கள், அணி முகாமைத்துவம் கருத்திற் கொள்கையிலேயே மேற்படி தகவலும் வெளியாகியுள்ளது.

நிபுணரொருவரின் ஆலோசனையைப் பெறுவதற்காக வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், ஒரு வாரமாக சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில் ஐந்தாவது டெஸ்டுக்கு ஜஸ்பிரிட் பும்ரா திரும்புவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 29, பெப்ரவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.